# யூலை – 14 – சனி

## புனித கத்தரின் தெக்காவித்த

**உமது அரியணை தொடக்கத்திலிருந்தே நிலைபெற்றள்ளது: நீர் தொான்று தொட்டே நிலைத்துள்ளீர். திபா. 93:2**

## முதல் வாசகம் : ஏசாயா 6 : 1 – 8

உசியா அரசர் மறைந்த ஆண்டில், மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை நான்கண்டேன் அவரது தொங்கலாடை கோவிலை நிரப்பிநின்றது.அவருக்குமேல் சேராபீன்கள் சூழ்ந்துநின்றனர். ஒவ்வொருவருக்கும் ஆறு இறக்கைகள் இருந்தன. ஒவ்வொருவரும் இரண்டு இறக்கைகளால் தம் முகத்தை மூடிக்கொண்டனர் இரண்டு இறக்கைகளால் தம் கால்களை மூடிமறைத்தனர் மற்ற இரண்டால் பறந்தனர். அவர்களுள் ஒருவர் மற்றவரைப்பார்த்து "படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர் மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது" என்று உரத்தகுரலில் கூறிக் கொண்டிருந்தார்.கூறியவரின் குரல் ஒலியால் வாயில் நிலைகளின் அடித்தளங்கள் அசைந்தன் கோவில் முழுவதும் புகையால் நிறைந்தது.அப்பொழுது நான் "ஐயோ, நான் அழிந்னே. ஏனெனில் தூய்மையற்ற உதடுகளைக்கொண்ட மனிதன் நான் தூய்மையற்ற உதடுகள்கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான் படைகளின் ஆண்டவராகிய அரசரை என்கண்கள் கண்டனவே" என்றேன். அப்பொழுது சேராபீன்களுள் ஒருவர் பலிபீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக்குறட்டால் எடுத்து அதைத் தம்கையில் வைத்துக் கொண்டு என்னைநோக்கிப் பறந்துவந்தார். அதனால் என் வாயைத்தொட்டு, "இதோ, இந்நெருப்புப்பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப்பழி உன்னைவிட்டு அகன்றது. உன்பாவம் மன்னிக்கப்பட்டது,"என்றார்.மேலும் "யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார்போவார்?" எனவினவும் என்தலைவரின் குரலை நான்கேட்டேன். அதற்கு, "இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்" என்றேன்.

**பதில்பாடல் :** ஆண்டவர் ஆட்சி செய்கின்றார். மாட்சியை ஆடையாய் அணிந்துள்ளார்.

## நற்செய்தி : மத்தேயு 10 : 24 – 33

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக்கூறியது : சீடர் குருவை விடப்பெரியவர் அல்ல. பணியாளரும் தம் தலைவரைவிடப் பெரியவர் அல்ல. சீடர் தம் குருவைப்போல் ஆகட்டும். பணியாளர் தம் தலைவரைப்போல் ஆகட்டும். அதுவே போதும். வீட்டுத்தலைவரையே பெயல்செபூல் என அழைப்பவர்கள் வீட்டாரைப்பற்றி இன்னும் தரக்குறைவாகப் பேசமாட்டார்களா?" எனவே, அவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஏனெனில் வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை. அறியமுடியாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை.நான் உங்களுக்கு இருளில் சொல்வதை நீங்கள் ஒளியில் கூறுங்கள். காதோடு காதாய்க் கேட்பதை வீட்டின் மேல்தளத்திலிருந்து அறிவியுங்கள்.ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்.காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்று கூட உங்கள் தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது.உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது .சிட்டுக் குருவிகள் பலவற்றைவிட நீங்கள் மேலானவர்கள். எனவே அஞ்சாதிருங்கள்."மக்கள்முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்வேன். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்" என்றார்.

**தியானம்:** நாங்கள் எவ்வாறான பாவவாழ்வு வாழ்ந்தாலும் கூட எமக்காக பல அவமானங்கள், பழிச்சொற்கள், வேதனைகள் யாவற்றையும் ஏற்றுக் கொண்ட இறைமகன் இயேசு நாங்கள் எவ்வாறான பாவங்கள் பாவப் பழக்க வழக்கங்கள் இவ்வாறானவற்றால் மூழ்கிக்கிடந்தாலும் யாா் யாரை தனக்கென அழைக்க சித்தங் கொள்கிறாரோ அவா்களை அழைத்து அதற்கேற்றவகையில் பன்படுத்தி வழி நடத்துகிறாா் என்பதை இன்றைய தியான வாசகங்கள் தெளிவுபடுத்தகின்றன. அன்று எசாயா இறைவாக்கினா் தான் பாவம் நிறைந்தவன், தூய்மையற்ற உதடுகளைக் கொண்டவன் என்று கூறியபோது ஆண்டவா் அவா் மூலமாக பலவிதமான அருளடையானங்களை செய்ய சித்தங் கொண்டு அவா் உதடுகளிலே நெருப்புப் பொறியை அனுப்பி உன் குற்றப்பழி உன்னைவிட்டு அகன்றது, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று (எசா.6:5)ல் கூறப்பட்டிருப்பதைப் பாா்க்கின்றோம். இன்று நாங்களும் ஆண்டவா் இயேசுவைக் காணவேண்டும், அவா் அன்பை சுவைக்க வேண்டும் என்ற தாகங் கொள்ள வேண்டும். அப்போது தான் அவரும் எங்கள் மத்தியில் வருவதற்கு ஆசைப்படுவாா். அதற்காக நாங்கள் தெரிந்தும் தெரியாமலும் செய்யும் அனைத்துப் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு வேண்டி எசாயா இறைவாக்கினரை அழைத்து அவா் மூலமாக மக்களுக்கு அறிவிக்கவேண்டிய செய்திகளை அறிவிதாரோ நாங்களும் அவரால் அழைக்கப்பட்டு அவருக்கேற்றவகையில் அவா் பணிபுரிய எங்களைத் தயாா்படுத்துவோம்.